## நம்மாழ்வார் அருளிச் செய்த
## அதர்வண வேத ஸாரமான
## பெரிய திருவந்தாதி

### தனியன்

### எம்பெருமானார் அருளிச் செய்தது

முந்துற்ற நெஞ்சே! முயற்றி தரித்து உரைத்து *
வந்தித்து வாய் ஆர வாழ்த்திச் * - சந்த
முருகூரும் சோலை சூழ் மொய் பூம் பொருநல் *
குருகூரன் மாறன் பேர் கூறு

## நம்மாழ்வார் அருளிச் செய்த
## அதர்வண வேத ஸாரமான
## பெரிய திருவந்தாதி

** முயற்றி சுமந்து எழுந்து * முந்துற்ற நெஞ்சே! *
இயற்றுவாய் எம்மொடு நீ கூடி ** - நயப்புடைய
நாவீன் தொடை கிளவி * உள் பொதிவோம் * நற்பூவைப்
பூவீன்ற வண்ணன் புகழ் 1

புகழ்வோம் பழிப்போம் * புகழோம் பழியோம் *
இகழ்வோம் மதிப்போம் மதியோம் - இகழோம் ** மற்று
எங்கள் மால்! செங்கண் மால்! * சீறல் நீ தீ வினையோம் *
எங்கள் மால் கண்டாய் இவை 2

இவை அன்றே நல்ல * இவை அன்றே தீய *
இவை என்றிவை அறிவனேலும் ** - இவை எல்லாம்
என்னால் அடைப்பு நீக்கு * ஒண்ணாது இறையவனே! *
என்னால் செயற்பாலது என்? 3

என்னின் மிகு புகழார் யாவரே? * பின்னையும் மற்று
எண்ணில் * மிகு புகழேன் யான் அல்லால் ** - என்ன
கருஞ்சோதிக் * கண்ணன் கடல் புரையும் * சீலப்
பெருஞ்சோதிக்கு என் நெஞ்சு ஆள்பெற்று 4

பெற்ற தாய் நீயே * பிறப்பித்த தந்தை நீ *
மற்றையார் ஆவாரும் நீ பேசில் ** - எற்றேயோ!
மாய! மா மாயவளை * மாய முலை வாய் வைத்த *
நீ அம்மா! காட்டும் நெறி 5

நெறி காட்டி நீக்குதியோ? * நின் பால் கரு மா
முறி மேனி காட்டுதியோ? ** மேல் நாள் - அறியோமை *
என் செய்வான் எண்ணினாய்? கண்ணனே! * ஈதுரையாய்
என் செய்தால் என் படோம் யாம்? 6

யாமே அரு வினையோம் சேயோம் * என் நெஞ்சினார்
தாமே * அணுக்கராய்ச் சார்ந்து ஒழிந்தார் ** - பூ மேய
செம்மாதை * நின் மார்வில் சேர்வித்து * பார் இடந்த
அம்மா! நின் பாதத்து அருகு 7

அருகும் சுவடும் தெரிவுணரோம் * அன்பே
பெருகும் மிக * இது என்? பேசீர் ** - பருகலாம்
பண்புடையீர்! பார் அளந்தீர்! * பாவியேம் கண் காண்பரிய *
நுண்புடையீர்! நும்மை நுமக்கு 8

நுமக்கடியோம் என்றென்று * நொந்துரைத்து என்? * மாலார்
தமக்கு அவர் தாம் * சார்வரியர் ஆனால்? ** - எமக்கு இனி
யாதானும் * ஆகிடு காண் நெஞ்சே! * அவர் திறத்தே
யாதானும் சிந்தித்து இரு 9

இரு நால்வர் * ஈரைந்தின் மேல் ஒருவர் * எட்டோடு
ஒரு நால்வர் * ஓர் இருவர் அல்லால் ** - திருமாற்கு
யாம் ஆர்? வணக்கம் ஆர்? * ஏ பாவம் நன்னெஞ்சே! *
நாமா மிக உடையோம் நாழ் 10

நாழால் அமர் முயன்ற * வல்லரக்கன் இன்னுயிரை *
வாழா வகை வலிதல் நின் வலியே ** - ஆழாத
பாரும் நீ வானும் நீ * காலும் நீ தீயும் நீ *
நீரும் நீயாய் நின்ற நீ 11

நீ அன்றே ஆழ் துயரில் * வீழ்விப்பான் நின்று உழன்றாய்? *
போய் ஒன்று சொல்லி என்? போ நெஞ்சே! ** - நீ என்றும்
காழ்த்து உபதேசம் தரினும் * கைக் கொள்ளாய் * கண்ணன் தாள்
வாழ்த்துவதே கண்டாய் வழக்கு 12

வழக்கொடு மாறுகொள் அன்று * அடியார் வேண்ட *
இழக்கவும் காண்டும் இறைவ! * - இழப்புண்டே? **
எம் ஆட்கொண்டாகிலும் * யான் வேண்ட என் கண்கள் *
தம்மால் காட்டு உன் மேனிச் சாய் 13

சாயால் கரியானை * உள் அறியாராய் நெஞ்சே! *
பேயார் முலை கொடுத்தார் பேயராய் ** - நீ யார்? போய்த்
தேம்பூண் சுவைத்து * ஊன் அறிந்து அறிந்தும் * தீ வினையாம்
பாம்பார் வாய்க் கை நீட்டல் பார்த்தி 14

பார்த்தோர் எதிரிதா நெஞ்சே! * படு துயரம்
பேர்த்தோதப் * பீடழிவாம் பேச்சில்லை ** - ஆர்த்தோதம்
தம் மேனி * தாள் தடவத் தாம் கிடந்து * தம்முடைய
செம்மேனிக் கண் வளர்வார் சீர் 15

சீரால் பிறந்து * சிறப்பால் வளராது *
பேர் வாமன் ஆகாக்கால் பேராளா! ** - மார்பாரப்
புல்கி நீ உண்டு உமிழ்ந்த * பூமி நீர் ஏற்பரிதே? *
சொல்லு நீ யாம் அறியச் சூழ்ந்து 16

சூழ்ந்து அடியார் வேண்டினக்கால் * தோன்றாது விட்டாலும் *
வாழ்ந்திடுவர் பின்னும் தம் வாய் திறவார் ** - சூழ்ந்து எங்கும்
வாள் வரைகள் போல் அரக்கன் * வன் தலைகள் தாம் இடிய *
தாள் வரை வில் ஏந்தினார் தாம் 17

தாம்பால் ஆப்புண்டாலும் * அத்தழும்பு தான் இளக *
பாம்பால் ஆப்புண்டு பாடுற்றாலும் ** - சோம்பாது இப்
பல் உருவை எல்லாம் * படர்வித்த வித்தா! * உன்
தொல் உருவை யார் அறிவார்? சொல்லு 18

சொல்லில் குறை இல்லை * சூதறியா நெஞ்சமே! *
எல்லி பகல் என்னாது எப்போதும் ** - தொல்லைக் கண்
மாத் தானைக்கெல்லாம் * ஓர் ஐவரையே மாறாக *
காத்தானைக் காண்டு நீ காண் 19

காணப் புகில் அறிவு * கைக் கொண்ட நன்னெஞ்சம் *
நாணப்படும் அன்றே? நாம் பேசில் ** - மாணி
உருவாகிக் கொண்டு * உலகம் நீர் ஏற்ற சீரான் *
திருவாகம் தீண்டிற்றுச் சென்று 20

சென்றங்கு வெந்நரகில் * சேராமல் காப்பதற்கு *
இன்றிங்கு என் நெஞ்சால் இடுக்குண்ட ** - அன்றங்குப்
பார் உருவும் பார் வளைத்த * நீர் உருவும் கண் புதைய *
கார் உருவன் தான் நிமிர்த்த கால் 21

காலே பொதத் திரிந்து * கத்துவராம் இனநாள் *
மாலார் குடி புகுந்தார் என் மனத்தே ** - மேலால்
தருக்கும் இடம் பாட்டினொடும் * வல்வினையார் தாம் * வீற்று
இருக்கும் இடம் காணாது இளைத்து 22

இளைப்பாய் இளையாப்பாய் * நெஞ்சமே! சொன்னேன் *
இளைக்க நமன் தமர்கள் பற்றி * - இளைப்பெய்த **
நாய் தந்து மோதாமல் * நல்குவான் நல்காப்பான் *
தாய் தந்தை எவ்வுயிர்க்கும் தான் 23

தானே தனித் தோன்றல் * தன் அளப்பு ஒன்று இல்லாதான் *
தானே பிறர்கட்கும் தற்றோன்றல் ** - தானே
இளைக்கில் பார் கீழ் மேலாம் * மீண்டு அமைப்பான் ஆனால் *
அளக்கிற்பார் பாரின் மேல் ஆர்? 24

ஆரானும் ஆதானும் செய்ய * அகல் இடத்தை
ஆராய்ந்து * அது திருத்தல் ஆவதே? ** - சீர் ஆர்
மனத்தலை * வன்துன்பத்தை மாற்றினேன் * வானோர்
இனத் தலைவன் கண்ணனால் யான் 25

யானும் என் நெஞ்சும் * இசைந்தொழிந்தோம் * வல்வினையைக்
கானும் மலையும் புகக் கடிவான் ** - தான் ஓர்
இருள் அன்ன மாமேனி * எம் இறையார் தந்த *
அருள் என்னும் தண்டால் அடித்து 26

அடியால் படி கடந்த முத்தோ? * அதன்றேல்
முடியால் * விசும்பு அளந்த முத்தோ? ** - நெடியாய்!
செறி கழல்கள் தாள் நிமிர்த்துச் * சென்று உலகம் எல்லாம் *
அறிகிலமால் நீ அளந்த அன்று 27

அன்றே நம் கண் காணும் * ஆழியான் கார் உருவம் *
இன்றே நாம் காணாது இருப்பதுவும் ** - என்றேனும்
கட்கண்ணால் * காணாத அவ்வுருவை * நெஞ்சென்னும்
உட்கண்ணேல் காணும் உணர்ந்து 28

உணர ஒருவர்க்கு * எளியனே? செவ்வே *
இணரும் துழாய் அலங்கல் எந்தை ** - உணரத்
தனக்கு எளியர் எவ்வளவர் * அவ்வளவன் ஆனால் *
எனக்கு எளியன் எம்பெருமான் இங்கு 29

இங்கில்லை * பண்டு போல் வீற்று இருத்தல் * என்னுடைய
செங்கண்மால் * சீர்க்கும் சிறிதுள்ளம் ** - அங்கே
மடி அடக்கி நிற்பதனில் * வல்வினையார் தாம் * மீண்டு
அடி எடுப்பது அன்றோ அழகு? 30

அழகும் அறிவோமாய் * வல்வினையைத் தீர்ப்பான் *
நிழலும் அடி தாறும் ஆனோம் ** - சுழலக்
குடங்கள் * தலை மீது எடுத்துக் கொண்டாடி * அன்று அத்
தடங்கடலை மேயார் தமக்கு 31

தமக்கு அடிமை வேண்டுவார் * தாமோதரனார்
தமக்கு * அடிமை செய் என்றால் செய்யாது ** - எமக்கு என்று
தாம் செய்யும் தீவினைக்கே * தாழ்வுறுவர் நெஞ்சினார் *
யான் செய்வது இவ்விடத்து இங்கு யாது? 32

யாதானும் ஒன்றறியில் * தன் உகக்கில் என் கொலோ? *
யாதானும் நேர்ந்து அணுகாவாறு தான்? ** - யாதானும்
தேறுமா செய்யா * அசுரர்களை * நேமியால்
பாறு பாறாக்கினான் பால் 33

பால் ஆழி நீ கிடக்கும் பண்பை * யாம் கேட்டேயும் *
கால் ஆழும் நெஞ்சழியும் கண் சுழலும் ** - நீலாழிச்
சோதியாய்! ஆதியாய்! * தொல்வினை எம்பால் கடியும் *
நீதியாய்! நிற்சார்ந்து நின்று 34

நின்றும் இருந்தும் * கிடந்தும் திரிதந்தும் *
ஒன்றுமோ ஆற்றான் என் நெஞ்சகலான் ** - அன்று அங்கை
வன்புடையால் பொன் பெயரோன் * வாய் தகர்த்து மார்வு இடந்தான் *
அன்புடையன் அன்றே அவன்? 35

அவனாம் இவனாம் உவனாம் * மற்று உம்பர்
அவனாம் * அவன் என்று இராதே ** - அவனாம்
அவனே எனத் தெளிந்து * கண்ணனுக்கே தீர்ந்தால் *
அவனே எவனேலுமாம் 36

ஆம் ஆறு அறிவுடையார் * ஆவது அரிது அன்றே? *
நாமே அது உடையோம் நன்னெஞ்சே! ** - பூமேய்
மதுகரமே * தண் துழாய் மாலாரை * வாழ்த்தாம்
அது கரமே அன்பால் அமை 37

அமைக்கும் பொழுது உண்டே? * ஆராயில் நெஞ்சே! *
இமைக்கும் பொழுதும் இடைச்சி - குமைத் திறங்கள் **
ஏசியே ஆயினும் * ஈன்துழாய் மாயனையே *
பேசியே போக்காய் பிழை 38

பிழைக்க முயன்றோமோ? * நெஞ்சமே! பேசாய் *
தழைக்கும் துழாய் மார்வன் தன்னை ** - அழைத்து ஒருகால்
போய் உபகாரம் * பொலியக் கொள்ளாது * அவன் புகழே
வாய் உபகாரம் கொண்ட வாய்ப்பு 39

வாய்ப்போ இது ஒப்ப * மற்றில்லை வா நெஞ்சே! *
போய்ப் போஒய் வெந்நரகில் பூவியேல் ** - தீப் பால
பேய்த் தாய் * உயிர் கலாய்ப் பால் உண்டு * அவள் உயிரை
மாய்த்தானை வாழ்த்தே வலி 40

வலியம் என நினைந்து * வந்து எதிர்ந்த மல்லர் *
வலிய முடி இடிய வாங்கி ** - வலிய நின்
பொன் ஆழிக் கையால் * புடைத்திடுதி கீளாதே *
பன்னாளும் நிற்கும் இப்பார் 41

பார் உண்டான் பார் உமிழ்ந்தான் * பார் இடந்தான் பார் அளந்தான் *
பார் இடம் முன் படைத்தான் என்பரால் ** - பார் இடம்
ஆவானும் * தான் ஆனால் ஆர் இடமே? * மற்றொருவர்க்கு
ஆவான் புகாவால் அவை 42

அவயம் என நினைந்து * வந்த சுரர் பாலே *
நவையை நளிர்விப்பான் தன்னை ** - கவை இல்
மனத்துயர வைத்து இருந்து * வாழ்த்தாதார்க்கு உண்டோ? *
மனத் துயரை மாய்க்கும் வகை 43

வகை சேர்ந்த நன்னெஞ்சும் * நா உடைய வாயும் *
மிக வாய்ந்து வீழா எனிலும் ** - மிக ஆய்ந்து
மாலைத் தாம் * வாழ்த்தாது இருப்பர் இது அன்றே? *
மேலைத் தாம் செய்யும் வினை 44

வினையார் தர முயலும் * வெம்மையை அஞ்சி *
தினையாம் சிறிதளவும் செல்ல - நினையாது **
வாசகத்தால் ஏத்தினேன் * வானோர் தொழுது இறைஞ்சும் *
நாயகத்தான் பொன் அடிக்கள் நான் 45

நான் கூறும் * கூற்றாவது இத்தனையே * நாணாளும்
தேங்கோத * நீர் உருவன் செங்கண் மால் ** - நீங்காத
மா கதி ஆம் வெந்நரகில் * சேராமல் காப்பதற்கு *
நீ கதியா நெஞ்சே! நினை 46

நினைத்து இறைஞ்சி மானிடவர் * ஒன்று இரப்பர் என்றே *
நினைத்திடவும் வேண்டா நீ நேரே ** - நினைத்து இறைஞ்ச
எவ்வளவர் * எவ்விடத்தோர் மாலே! * அது தானும்
எவ்வளவும் உண்டோ? எமக்கு 47

எமக்கு யாம் விண்ணாட்டுக்கு * உச்சமதாம் வீட்டை *
அமைத்து இருந்தோம் அஃதன்றே யாமாறு? ** - அமைப்பொலிந்த
மென் தோளி காரணமா * வெங்கோட்டு ஏறு ஏழுடனே *
கொன்றானையே மனத்துக் கொண்டு 48

கொண்டல் தான் மால் வரை தான் * மா கடல் தான் கூர் இருள் தான் *
வண்டறாப் பூவை தான் மற்றுத் தான் ** - கண்ட நாள்
கார் உருவம் * காண் தோறும் நெஞ்சு ஓடும் * கண்ணனார்
பேர் உரு என்றெம்மைப் பிரிந்து 49

பிரிந்து ஒன்று நோக்காது * தம்முடைய பின்னே *
திரிந்து உழலும் சிந்தனையார் தம்மை ** - புரிந்து ஒருகால்
ஆவா! என இரங்கார் * அந்தோ! வலிதே கொல்? *
மா வாய் பிளந்தார் மனம் 50

மனம் ஆளும் ஓர் ஐவர் * வன்குறும்பர் தம்மை *
சின மாள்வித்து ஓர் இடத்தே சேர்த்து ** - புன மேய
தண்துழாயான் அடியைத் * தான் காணும் அஃதன்றே *
வண்துழாம் சீரார்க்கு மாண்பு 51

மாண் பாவித்து அஞ்ஞான்று * மண் இரந்தான் * மாயவள் நஞ்சு
ஊண் பாவித்து * உண்டானது ஓர் உருவம் ** - காண்பான் நங்
கண் அவா * மற்றொன்று காண் உறா * சீர் பரவாது
உண்ண வாய் தான் உறுமோ ஒன்று? 52

ஒன்றுண்டு செங்கண் மால்! யான் உரைப்பது * உன் அடியார்க்கு
என் செய்வன் என்றே இருத்தி நீ ** - நின் புகழில்
வைகும் * தம் சிந்தையிலும் மற்று இனிதோ? * நீ அவர்க்கு
வைகுந்தம் என்று அருளும் வான் 53

வானோ? மறி கடலோ? * மாருதமோ? தீயகமோ? *
கானோ? ஒருங்கிற்றும் கண்டிலம் ஆல் ** - ஆன் ஈன்ற
கன்றுயரத் தாம் எறிந்து * காய் உதிர்த்தார் தாள் பணிந்தோம் *
வன்துயரை யாவா! மருங்கு 54

மருங்கோதம் மோதும் * மணி நாகணையார் *
மருங்கே வர அரியரேலும் ** - ஒருங்கே
எமக்கு அவரைக் காணலாம் * எப்போதும் உள்ளால் *
மனக் கவலை தீர்ப்பார் வரவு 55

வரவாறு ஒன்றில்லையால் * வாழ்வினிதால் * எல்லே!
ஒரு ஆறு * ஒருவன் புகா ஆறு ** - உரு மாறும்
ஆயவர் தாம் சேயவர் தாம் * அன்று உலகம் தாயவர் தாம் *
மாயவர் தாம் காட்டும் வழி 56

வழித் தங்கு வல்வினையை * மாற்றானோ? நெஞ்சே! *
தழீஇக் கொண்டு போர் அவுணன் தன்னை ** - சுழித்து எங்கும்
தாழ்விடங்கள் பற்றிப் * புலால் வெள்ளம் தான் உகள *
வாழ்வு அடங்க மார்வு இடந்த மால்? 57

மாலே! படிச் சோதி மாற்றேல் * இனி உனது *
பாலே போல் சீரில் பழுத்து ஒழிந்தேன் ** - மேலால்
பிறப்பின்மை பெற்று * அடிக் கீழ்க் குற்றேவல் அன்று *
மறப்பின்மை யான் வேண்டும் மாடு 58

மாடே வரப் பெறுவராம் என்றே * வல்வினையார்
காடானும் * ஆதானும் கைக் கொள்ளார் ** - ஊடே போய்ப்
பேர் ஓதம் சிந்து * திரைக் கண்வளரும் * பேராளன்
பேர் ஓதச் சிந்திக்கப் பேர்ந்து 59

பேர்ந்தொன்று நோக்காது * பின் நிற்பாய் நில்லாப்பாய் *
ஈன்துழாய் மாயனையே என் நெஞ்சே! ** - பேர்ந்தெங்கும்
தொல்லை மா வெந்நரகில் * சேராமல் காப்பதற்கு *
இல்லை காண் மற்றோர் இறை 60

இறை முறையான் சேவடி மேல் * மண் அளந்த அந்நாள் *
மறை முறையால் வானாடர் கூடி ** - முறை முறையின்
தாதிலகு * பூத் தெளித்தால் ஒவ்வாதே? * தாழ் விசும்பின்
மீதிலகித் தான் கிடக்கும் மீன் 61

மீன் என்னும் கம்பின் * வெறி என்னும் வெள்ளி வேய் *
வான் என்னும் கேடிலா வான் குடைக்கு ** - தான் ஓர்
மணிக் காம்பு போல் நிமிர்ந்து * மண் அளந்தான் * நங்கள்
பிணிக்காம் பெரு மருந்து பின் 62

பின் துரக்கும் காற்றிழிந்த * சூற்கொண்டல் பேர்ந்தும் போய் *
வன் திரைக் கண் வந்தணைந்த வாய்மைத்தே ** - அன்று
திருச் செய்ய நேமியான் * தீ அரக்கி மூக்கும் *
பருச் செவியும் ஈர்ந்த பரன் 63

பரனாம் அவன் ஆதல் * பாவிப்பர் ஆகில் *
உரனால் ஒரு மூன்று போதும் ** - மரம் ஏழ் அன்று
எய்தானைப் * புள்ளின் வாய் கீண்டானையே * அமரர்
கை தான் தொழாவே கலந்து? 64

கலந்து நலியும் * கடுந்துயரை நெஞ்சே! *
மலங்க அடித்து மடிப்பான் ** - விலங்கல் போல்
தொல் மாலைக் கேசவனை * நாரணனை மாதவனை *
சொல் மாலை எப்பொழுதும் சூட்டு 65

சூட்டாய நேமியான் * தொல் அரக்கன் இன்னுயிரை *
மாட்டே துயர் இழைத்த மாயவனை ** - ஈட்ட
வெறி கொண்ட * தண்துழாய் வேதியனை * நெஞ்சே!
அறி கண்டாய் சொன்னேன் அது 66

அதுவோ நன்றென்று * அங்கு அமர் உலகோ வேண்டில் *
அதுவோர் பொருள் இல்லை அன்றே ** - அது ஒழிந்து
மண் இன்று ஆள்வேன் எனிலும் * கூடும் மட நெஞ்சே! *
கண்ணன் தாள் வாழ்த்துவதே கல் 67

கல்லும் கனை கடலும் * வைகுந்த வானாடும் *
புல்லென்று ஒழிந்தன கொல்? ஏ பாவம்! ** - வெல்ல
நெடியான் நிறம் கரியான் * உள் புகுந்து நீங்கான் *
அடியேனது உள்ளத்து அகம் 68

அகம் சிவந்த கண்ணினராய் * வல்வினையர் ஆவார் *
முகம் சிதைவராம் அன்றே முக்கி ** - மிகும் திருமால்
சீர்க் கடலை உள் பொதிந்த * சிந்தனையேன் தன்னை *
ஆர்க்கு அடலாம் செவ்வே அடர்த்து? 69

அடர் பொன் முடியானை * ஆயிரம் பேரானை *
சுடர் கொள் சுடர் ஆழியானை ** - இடர் கடியும்
மாதா பிதுவாக * வைத்தேன் எனதுள்ளே *
யாது ஆகில் யாதே இனி? 70

இனி நின்று நின் பெருமை * யான் உரைப்பது என்னே? *
தனி நின்ற சார்விலா மூர்த்தி! ** - பனி நீர்
அகத்துலவு * செஞ்சடையான் ஆகத்தான் * நான்கு
முகத்தான் நின் உந்தி முதல் 71

முதலாம் திரு உருவம் * மூன்று என்பர் * ஒன்றே
முதல் ஆகும் * மூன்றுக்கும் என்பர் - முதல்வா! **
நிகர் இலகு கார் உருவா! * நின் அகத்ததன்றே? *
புகர் இலகு தாமரையின் பூ 72

பூவையும் காயாவும் * நீலமும் பூக்கின்ற *
காவி மலர் என்றும் காண் தோறும் ** - பாவியேன்
மெல்லாவி * மெய் மிகவே பூரிக்கும் * அவ்வவை
எல்லாம் பிரான் உருவே என்று 73

என்றும் ஒரு நாள் * ஒழியாமை யான் இரந்தால் *
ஒன்றும் இரங்கார் உருக் காட்டார் ** - குன்று
குடை ஆக * ஆ காத்த கோவலனார் * நெஞ்சே!
புடை தான் பெரிதே புவி 74

புவியும் இரு விசும்பும் நின் அகத்த * நீ என்
செவியின் வழி புகுந்து என் உள்ளாய் ** - அவிவின்றி
யான் பெரியன் நீ பெரியை * என்பதனை யார் அறிவார்? *
ஊன் பருகு நேமியாய்! உள்ளு 75

உள்ளிலும் உள்ளம் தடிக்கும் * வினைப் படலம் *
விள்ள விழித்து உன்னை மெய் உற்றால் ** - உள்ள
உலகளவும் * யானும் உளன் ஆவன் என் கொலோ? *
உலகளந்த மூர்த்தி! உரை 76

உரைக்கில் ஓர் சுற்றத்தார் * உற்றார் என்றாரே? *
இரைக்கும் கடல் கிடந்த எந்தாய்! ** - உரைப்பெல்லாம்
நின் அன்றி * மற்றிலேன் கண்டாய்! * எனதுயிர்க்கோர்
சொல் நன்றி ஆகும் துணை 77

துணை நாள் பெருங் கிளையும் * தொல் குலமும் * சுற்றத்
திணை நாளும் * இன்புடைத்தாம் ஏலும் * - கணை நாணில்
ஓவாத் தொழில் சார்ங்கன் * தொல் சீரை நன்னெஞ்சே! *
ஓவாத ஊண் ஆக உண் 78

உண்ணாட்டுத் தேசன்றே! * ஊழ் வினையை அஞ்சுமே? *
விண்ணாட்டை ஒன்றாக மெச்சுமே? ** - மண்ணாட்டில்
ஆர் ஆகி * எவ்விழிவு இற்றானாலும் * ஆழி அங்கைப்
பேர் ஆயற்கு ஆளாம் பிறப்பு 79

பிறப்பு இறப்பு மூப்புப் * பிணி துறந்து * பின்னும்
இறக்கவும் * இன்புடைத்தாம் ஏலும் ** - மறப்பெல்லாம்
ஏதமே * என்றல்லால் எண்ணுவனே? * மண் அளந்தான்
பாதமே ஏத்தாப் பகல் 80

பகல் இரா என்பதுவும் * பாவியாது * எம்மை
இகல் செய்து * இருபொழுதும் ஆள்வர் ** - தகவாத்
தொழும்பர் இவர் சீர்க்கும் * துணை இலர் என்றோரார் *
செழும் பரவை மேயார் தெரிந்து 81

தெரிந்து உணர்வொன்று இன்மையால் * தீவினையேன் * வாளா
இருந்து ஒழிந்தேன் * கீழ் நாள்கள் எல்லாம் ** - கரந்து உருவின்
அம்மானை * அந்நான்று பின் தொடர்ந்த * ஆழி அங்கை
அம்மானை ஏத்தாது அயர்த்து 82

அயர்ப்பாய் அயராப்பாய் * நெஞ்சமே! சொன்னேன் *
உயப் போம் நெறி இதுவே கண்டாய் ** - செயற்பால
வல்லவே செய்கிறுதி * நெஞ்சமே! அஞ்சினேன் *
மல்லர் நாள் வவ்வினனை வாழ்த்து 83

வாழ்த்தி அவன் அடியைப் பூப் புனைந்து * நின் தலையைத்
தாழ்த்து * இரு கை கூப்பு என்றால் கூப்பாத - பாழ்த்த விதி! **
எங்குற்றாய் என்றவனை * ஏத்தாது என் நெஞ்சமே! *
தங்கத்தான் ஆமேலும் தங்கு 84

தங்கா முயற்றியவாய்த் * தாழ் விசும்பின் மீது பாய்ந்து *
எங்கே புக்கு எத்தவம் செய்திட்டன கொல்? ** - பொங்கோதத்
தண் அம்பால் * வேலை வாய்க் கண் வளரும் * என்னுடைய
கண்ணன் பால் நல்நிறம் கொள் கார் 85

** கார் கலந்த மேனியான் * கை கலந்த ஆழியான் *
பார் கலந்த வல்வயிற்றான் பாம்பணையான் ** - சீர் கலந்த
சொல் நினைந்து போக்காரேல் * சூழ் வினையின் ஆழ்துயரை *
என் நினைந்து போக்குவர் இப்போது? 86

** இப்போதும் இன்னும் * இனிச் சிறிது நின்றாலும் *
எப்போதும் ஈதே சொல் என் நெஞ்சே! ** - எப்போதும்
கை கழலா நேமியான் * நம் மேல் வினை கடிவான் *
மொய் கழலே ஏத்த முயல் 87

**தசக அடிவரவு:** முயற்றி நாழ் சென்று அழகு வலியம் மனமாளும் இறைமுறையான் இனி பகல் ஒருபேர்

**நம்மாழ்வார் திருவடிகளே சரணம்**